**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.210** **நாள் :** 09.08.2025

**பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து "வெற்றி நிச்சயம்" வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி நிகழ்வு இன்று** (09.08.2025) **ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்ற முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இணைந்து "வெற்றி நிச்சயம்" வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி நிகழ்வு இன்று (09.08.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்ற முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள துப்புரவுப் பணியினை மேற்கொள்ளும் துப்புரவுப் பணியாளர்களின் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள 480 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். இதில் பத்தாவது தேர்ச்சி, 12ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ., டிப்ளமோ மற்றும் பட்டதாரிகள் அவர்களுடைய கல்விச் சான்றிதழ் சரிபார்க்கப் பெற்று வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திறன் பயிற்சிக்கு பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்களுக்கு ஒரு மாதம் முதல் மூன்று மாதம் வரை திறன் பயிற்சி வழங்கப்படும். இத்திறன் பயிற்சியின்போது, ரூபாய் 6000 முதல் 12,000 வரை ஊக்கத்தொகையும் மற்றும் வேலைவாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களின் குடும்பத்தில் வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்கள் பயன்பெறுவார்கள்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**